2023 ஏப்ரல் 6]

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. சந்திரன் அவர்கள்.*

திரு. S. சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பதி–திருத்தணி–சென்னை நெடுஞ்சாலை ஆயிரக்கணக்கான பயணிகள் பயன்படுத்தக்கூடிய சாலையாகும். அந்த நெடுஞ்சாலையில் நவீன வசதிகளுடன்கூடிய* Aavin Hi–Tech Parlour *அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சா.மு. நாசர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பொறுத்தவரையில், அவர் இடத்தை அடையாளம்காட்டும்பட்சத்தில், அவருடைய தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தே நாம் செய்து தருவோம். அதற்கான ஏற்பாடுகளை நிச்சயம் செய்து தருவோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 119, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார், மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

119—

தொழிற்பயிற்சி நிலையம்

***60381—திரு. S. அம்பேத்குமார்:**

மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன், தொழிலாளர் நலன்—திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வந்தவாசி சட்டமன்றத் தொகுதியில் புதியதாக அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. S. அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த இளைஞர்களுக்கு வேலைத் தட்டுப்பாடு இருக்கும் இந்தக் காலக்கட்டத்தில் கழக ஆட்சி மலர்ந்தவுடன், கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் 1,43,000 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கிய (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசியை அடுத்த செய்யாறு பகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை அமைந்துள்ளது. அந்த SIPCOT-ல், தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்றவர்கள் அதிகமாகத் தேவைப்படுகின்ற காரணத்தினால் வந்தவாசியில் படித்த இளைஞர்களுக்கு ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தால், செய்யாறு தொழிற்பேட்டையில் நேரடியாக வேலைவாய்ப்பு பெற்று சிறந்து விளங்குவார்கள். ஆகவே, வந்தவாசி இளைஞர்களைக் கருத்தில்கொண்டு, அங்கே ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்-திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசி தொகுதி அமைந்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏற்கெனவே 3 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 22 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 2,468 இடங்களில், 1,635 இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன; 833 இடங்கள் காலியாக உள்ளன. இந்நிலையில், இப்பகுதியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களே போதுமானதாக உள்ளதால், திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதியில் புதிய*

2023 ஏப்ரல் 6]

அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. அம்பேத்குமார் அவர்கள்.*

திரு. S. அம்பேத்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வந்தவாசியிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் போதுமான பயிற்சியாளர்களும், ஆசிரியர்களும் இல்லாத காரணத்தினாலும், போதுமான பாடப் பிரிவுகள் இல்லாத காரணத்தினாலும், அங்கே மாணவர்களின் சேர்க்கை குறைவாக உள்ளது. வந்தவாசியைச் சுற்றியுள்ள பகுதிகளில் அதிகளவில் காலணி தயாரிப்பு தொழில் சார்ந்தவர்களும், மோட்டார் தொழில் சார்ந்தவர்களும் இருப்பதால், அத்தகைய பாடப் பிரிவுகளை ஆராய்ந்து, அவற்றை உள்ளடக்கி வந்தவாசியில் தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தர நமது அரசு முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, மொத்தமாக 90 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள்தான் துவக்கப்பட்டன. ஆனால், நம்முடைய மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் தளபதி அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, இந்த இரண்டு ஆண்டுக் காலத்தில் மட்டும் 12 தொழிற்பயிற்சி நிலையங்கள் புதிதாகத் துவக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த 102 தொழிற்பயிற்சி நிலையங்களில், 53 தொழிற்பயிற்சி நிலையங்களில் இந்த ஆண்டு நூற்றுக்கு நூறு சதவிகிதம் மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மீதமுள்ள 49 தொழிற்பயிற்சி நிலையங்களில் 93 சதவிகிதம்* admission *நடைபெற்றிருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த 102 தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற மாணவர்களில், இந்த ஆண்டு 76 சதவிகித மாணவர்கள், அங்கேயே* campus selection *மூலம்*

பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல, இதுபோன்ற படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை முழுமையாக வழங்க வேண்டும் என்ற தொலைநோக்குத் திட்டத்தோடு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களால் கடந்த ஆண்டு TATA நிறுவனத்தோடு ஒப்பந்தம் போடப்பட்டு, ரூ.2,877 கோடி ஒதுக்கீடு செய்து, தொழிற்பயிற்சி நிலையங்களை 4.0 தரத்திற்கு உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில், பல்வேறு புதிய பயிற்சிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதாவது, Robotics and Digital Manufacturing, Electric Vehicle, Advanced CNC Machining, Manufacturing Process Control and Automation, Internet of Things, Advanced Additive Manufacturing, Advanced Welding, Advanced Painting Technology, Advanced Plumbing என இதுபோன்ற புதிய பயிற்சிகள் கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு தொழில் நிறுவனங்களைக் கொண்டு வருகின்ற நேரத்தில், அதற்கேற்ப தகுதி படைத்த, திறன் படைத்த இளைஞர்களை உருவாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இத்தகைய பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அந்தப் பகுதியில் சிப்காட் தொழிற்பேட்டை இருக்கிறது. நிறைய பயிற்சிகளைக் கொடுக்க வேண்டும்; வேலைவாய்ப்புகளை உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்ற காரணத்தினால், அவர்களின் கருத்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, நிதிநிலைமைக்கேற்ப எதிர்காலத்தில் புதிய தொழிற்பயிற்சி நிலையம் துவங்குவது பற்றி பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 120, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ரவி அவர்கள், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

120—

மாணவியர் விடுதி

***3822—திரு. சு. ரவி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—